**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 14-03-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-03-14 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-03-15 | 2023-03-16 | 2023-03-17 | 2023-03-18 | 2023-03-19 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 1.0 | 2.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 33.0 | 33.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 24.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 40 | 40 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 6.0 | 6.0 | 6.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 340 | 360 | 20 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 3 | 3 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

17-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரையிலான நாட்களில் மிக லேசான முதல் லேசான மழைப்பொழிவு எதிர்பார்க்கலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 4.0-6.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும்; காற்றின் திசையானது வடக்கு வடகிழக்கு முதல் வடக்கு வடமேற்கு நோக்கி வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 32.0°C-32.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 23.0°C-24.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 90%-ஆகவும் மற்றும் மாலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 30-40%-ஆகவும் காணப்படலாம்.

## பொது ஆலோசனை:

19.03.2022 முதல் 25.03.2022 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையை விட அதிகமாகவும் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையை விட குறைவாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலையானது எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையில் இருக்க கூடும்.

## குறுஞ்செய்தி :

எதிர்பார்க்கப்படும் மழையை அறுவடை செய்ய பழ மரங்களின் வேரினைச்சுற்றி உள் வட்டப்பாத்தி அமைக்கலாம். மிக லேசான மழைப்பொழிவு எதிர்பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரப்பதத்திற்கு ஏற்ப நீர்ப்பாசனம் செய்யலாம்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெற்பயிர்-வேர் தூர் கட்டுதல் நிலை முதல் பூ பூக்கும் நிலை - 1.இலைப்பேன்- ஏக்கருக்கு அசாடிராக்டின் 0.15% @ 600-1000 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு தியாமெதோக்ஸாம் 25% WG 40 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்; 2. தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.பாசி வளர்ச்சி- ஏக்கருக்கு காப்பர் சல்பேட் 1 கிலோ கிராம் வீதம் பாசன நீரில் கலந்து விடவும்; 4.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 5.இலைக் கருகல் நோய்- நடவுக்கு மேற்கொண்ட 30 & 45 நாட்களுக்குள் இந்நோயின் அறிகுறி தென்பட்டால் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிலோ கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் கலவை @ 300 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 500 கிலோ கலவையினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் மேலும் தேவைக்கேற்ப 15 நாட்கள் இடைவெளியில் மறு தெளிப்பினை மேற்கொள்ளலாம். |
| உளுந்து | உளுந்து - 1.புள்ளிகாய்த் துளைப்பான்- ஏக்கருக்கு தியோடிகார்ப் 75% WP 250g என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 2.மஞ்சள் தேமல் நோய்- ஏக்கருக்கு மெத்தில் டெமெட்டான் 25 EC 200 மில்லி லிட்டர் என்ற வீதம் அல்லது தியாமேதாக்சாம் 75 WG 40 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| பாசிப்பயறு | பச்சை பயிறு- புள்ளிகாய்த் துளைப்பான்- ஏக்கருக்கு தியோடிகார்ப் 75% WP 250g என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலை- 1.புகையிலை வெட்டுப்புழு- 1. ஏக்கருக்கு வேப்ப எண்ணெய் (2%) 8 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது குயினல்பாஸ் 25 EC 300 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். மற்றும் விளக்குப் பொறி அமைத்து அந்துப்பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம்; 2.பின் பருவ இலைப்புள்ளி- ஏக்கருக்கு ஹெக்ஸகோனசோல் 5% EC 600 மில்லி லிட்டர் அல்லது ஏக்கருக்கு ப்ரோபிகோனசோல் 25% EC 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| கரும்பு | கரும்பு- இளங்குருத்துப் புழு- ஏக்கருக்கு தியாமேதாக்சாம்75% w/w SG 64 கிராம் அல்லது ஏக்கருக்கு கிளோரன்டிரானிலிப்ரோல் 18.5 % SC150 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | 1.மிளகாய் - இலைப்பேன்- இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.மஞ்சள் முரனைச் சிலந்தி- புப்ரோஃபெசின் 25 SC 10 லிட்டர் தண்ணீருக்கு 8.0 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | SG 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | கத்தரி- 1.வெள்ளை ஈ- வேப்பண்ணெய் 3 சதம் என்றளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது தியாமேதோக்சாம் 25% WG 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் வீதம் கலந்து தெளிக்கலாம். ஏக்கருக்கு 5 முதல் 6 எண்ணிக்கையிலான மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியினை அமைக்கலாம்; 2.சிற்றிலை அல்லது சிறு இலை நோய்- டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம். |
| மாம்பழம் | மாமரம்- பூ பிணைக்கும் புழு- பாஸ்லோன் 35 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கும். |
| தென்னை | தென்னை- சுருள் வடிவ வெள்ளை ஈ- 1. ஏக்கருக்கு என்கார்சீய குவாடலூபே ஒட்டுண்ணிகளை @ 100 வீதம் விடலாம்; 2.ஆமணக்கு எண்ணெய் பூசிய மஞ்சள் நிற ஒட்டு பொறியினை ஏக்கருக்கு 5 வீதம் அமைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்; 3.இளந்தென்னைகளுக்கு ஏக்கருக்கு கிரைசோபர்லா ஜாஸ்ட்ரோவி சில்லம் முட்டைகளை @ 500 வீதம் விடலாம்; 4. வேப்பெண்ணைய் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். மேலும் கரும் பூஞ்சாண் நோய் தென்பட்டால் 5 % மைதா கரைசலை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| தர்பூசணி | தர்பூசணி- மஞ்சள் தேமல் நோய் (வெள்ளை ஈ)- ஏக்கருக்கு இமிடகிலோபிரிட் 70% WR 60 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 % வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |